[17th March 1966

கனம் திரு எம். பக்தவத்சலம் : அவ்வாறு புகார் ஒன்றும் வரவில்லை.

தொழிற்பேட்டைகள்

*317 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொழிற்பேட்டையில் கடந்த அக்டோபர் திங்கள் பொருள்கள் ஏதேனும் களவாடப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) கோவில்பட்டி தொழிற்பேட்டையின் வளைவுக்குள் உள்ள பண்டகசாலைக் கொட்டகையில் 17-10-65 தேதி இரவு ஒரு திருட்டு நடந்தது. சுமார் ரூ. 416 மதிப்புள்ள 12 மில்லி மீட்டர் மிருது எஃகு கம்பிகள் 6 கட்டுகளும், 10 மில்லி மீட்டர் மிருது எஃகுக் கம்பிகள் 5 கட்டுகளும் களவாடப்பட்டன. களவுபோன பொருள்கள் அனைத்தும் பின்னர் மீட்கப்பட்டன.

திரு. மு. கருணாநிதி : இந்தக் களவு சம்பந்தமாக அந்தத் தொழில் பேட்டையினுடைய தோட்டத்தின் காவலாளி கைது செய்யப்பட்டு, அவர்தான் களவாடியதாக ஒப்புக் கொள்ள வேண்டுமென்று போலீஸ் அதிகாரிகள் வற்புறுத்த முற்பட்டதன் காரணமாக, மனமுடைந்து அவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி விவரம் என்னிடத்தில் இல்லை.

'The night watchman on duty on the night of theft is reported to have been suspended from duty and that another suitable watchman from Tuticorin has been transferred and posted to Kovilpatti in his place.'

என்றுதான் இருக்கிறது. அது சம்பந்தமாகத் தனியாகக் கேள்வி போட்டால், சக போலீஸ் அமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொல்வார்கள்.

திரு. மு. கருணாநிதி : அவர் தன்மீது சுமத்தப்பட்ட பழிக்கு அஞ்சித் தற்கொலை செய்து கொண்டார் என்று அந்தத் தோட்டக் காவலாளியின் மனைவி உள்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு மனு எழுதியிருக்கிறார்கள். அதை விசாரித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைச் சக அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள். இது சம்பந்தமாக ஜட்ஜ்மெண்டில் என்ன இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். வற்புறுத்தப்பட்டது என்று சொல்லுகிற காரணத்தால் ஜட்ஜ்மெண்டில் குறிப்பிட்டிருப்பதைப் படிக்கிறேன்.

17th March 1966]

' . . . The plea of accused 1 and accused 2 is voluntary. Hence, I accept their plea, find accused 1 and accused 2 guilty under Sections 457 and 380 of the Indian Penal Code and convict them . . . ' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கன்விக்ஷன் கூட 'Probation Offenders Act ' பிரகாரந்தான். மற்றவர்களுக்கு ஆறு வாரம் தண்டனை கொடுத்திருக்கிறார்கள். இந்த விதமாகத் தான்புறுத்தப்பட்டார் என்றால் அதைப் பற்றி அப்போதே கோர்ட்டில் தெரிவித்திருக்க வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் படிக்கும் போது 457-வது செக்ஷனை மட்டுந்தான் சொன்னார்கள். அதிலே, களவு போகாமல் களவு செய்ய முயற்சித்ததற்காக தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 380 செக்ஷன் என்றும் படித்தேன்.

திரு. மு. கருணாநிதி : அந்தக் குற்றவாளிகளின் பெயர்களை அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வெள்ளச்சாமி, சங்கரன் இரண்டு பேர்.

*318 கேள்வி.—**திரு. ஆ. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள தொழிற்பேட்டையில் புதிதாக தொழிற் கூடங்கள் கட்டப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அவைகள், யார் யாருக்குக் கொடுக்கப் பட்டன ?

(உ) அந்தக் கூடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகை விகிதம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Seven additional Units are under construction in the Industrial Estate Tiruchirappalli.

(*b*) They have been allotted to—

(i) Government Regional Press.

(ii) Messrs. Lamina Industries.

(iii) Naan Foundry.

(iv) Messrs. Espee Engineering Works.

(v) Messrs. Madras Rubber Industries.

(vi) Messrs. Texjay Industrial Corporation.

(vii) Messrs. Standard Electronics and Radio Industries

The Units have not yet been occupied by the allottees.